


**09. 11. 2025**

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் ஆன்மிகம், பாரம்பரியத்தில் சமண தத்துவங்கள் முக்கிய பங்காற்றுவதாக குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திரமோடி உத்தரகண்ட் மாநிலம் டேராடூனில் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டினார்.

3. தமிழக அரசின் பல்வேறு நலத்திட்டங்களை துவக்கி வைப்பதற்காக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று திருச்சி வருகிறார்.

4. தமிழ் வளர்ச்சிப் பணிகளில் இளைஞர்கள் தங்களை ஈடுபடுத்தி கொள்ள வேண்டுமென்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அறிவுறுத்தி உள்ளார்.

5. டாக்காவில் ஆசிய வில்வித்தை சாம்பியன்பட்ட போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது ஆப்பிரிக்க பயணத்தின் முதல்கட்டமாக அங்கோலா அதிபர் ஜோவா மேனுவலுடன் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

அரசுமுறை பயணமாக நேற்றிரவு அங்கோலா, சென்றடைந்த அவர், அந்நாட்டின் சுதந்திர தின பொன்விழா கொண்டாட்டங்களில் பங்கேற்கிறார்.

அங்கோலா நாடளுமன்றத்தில் உரையாற்ற உள்ள குடியரசு தலைவர், சுகாதாரம், விண்வெளி தொழில் நுட்பம், டிஜிட்டல் கட்டமைப்பு, உணவு பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

இப்பயணத்தின் 2-வது கட்டமாக குடியரசு தலைவர் நாளைமறுநாள் போட்ஸ்வானா புறப்படுகிறார்.

❖❖❖❖❖❖❖❖

குடியரசு துணைத் தலைவர்

நாட்டின் ஆன்மிகம் மற்றும் பாரம்பரியத்தில் சமண தத்துவங்கள் மிக முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம் சரவண பெலகலாவில் இன்று நடைபெற்ற ஆச்சாரிய சாந்தி சாகர் மஹாராஜின் நினைவஞ்சலி நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், தமிழ் இலக்கியத்திற்கு சமண முனிவர்கள் மற்றும் அறிஞர்கள் சங்ககாலத்திற்கும் முற்பட்டு அதிமுக்கியத்துவம் அளித்து வந்ததாக கூறினார்.

உலகில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்ட சமண மத கொள்கைகள் வழிகாட்டுவதாக குடியரசு துணைத்தலைவர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி உத்தரகண்ட் மாநிலம் டேராடூனில் அம்மாநிலத்தின் வெள்ளி விழா கொண்டாட்டங்களில் தற்போது பங்கேற்றுள்ளார்.

அம்மாநிலத்தில் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதுடன், 930 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு முடிவுற்ற திட்டங்களையும் தொடங்கிவைத்தார்.

பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் 28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு 62 கோடி ரூபாய் உதவித் தொகையை நேரடியாக அவர்களின் வங்கி கணக்கில் பிரதமர் செலுத்தி பயனாளிகளுடன் கலந்துரையாடினார்.

முன்னதாக மாநிலத்தின் வெள்ளி விழாவை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா உள்ளிட்டோர் அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு தலைவர் விடுத்துள்ள செய்தியில் நாட்டின் ஆன்மீக மற்றும் கலாச்சார பங்களிப்பில் உத்தரகண்ட் மாநிலம் முன்னிலை வகிப்பதாக கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர் பயணம்

பிரதமர் திரு. நரேந்திரமோடி 2 நாள் அரசுமுறை பயணமாக நாளைமறுநாள் பூட்டான் செல்கிறார்.

அந்நாட்டு மன்னர் ஜிக் மே கேசர் வாங்சூக் உடன் இணைந்து ஆயிரத்து 20 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட புனாட் சாங்சூ இரண்டாவது நீர்மின் திட்டத்தை தொடங்கிவைக்கும் பிரதமர், இருதரப்பு உறவுகள், மண்டல, சர்வதேச பிரச்சனைகள் உள்ளிட்டவை குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

தேசிய சட்டப்பணிகள் தினம்

தேசிய சட்டப்பணிகள் தினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு. நிதின்கட்கரி வெளியிட்டுள்ள செய்தியில் நீதி, சமத்துவம் மற்றும் சட்ட அதிகாரமளித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மக்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்துள்ளார்.

கடந்த 1995-ம் ஆண்டு இதேநாளில் நடைமுறைக்கு வந்த சட்ட சேவைகள் அதிகார சபை சட்டத்தை நினைவுகூறும் வகையில் ஆண்டுதோறும் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

நாடுமுழுவதும் கடந்த 4 ஆண்டுகளில் 44 அரை லட்சத்திற்கும் அதிகமானோர் இலவச சட்ட உதவிகள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுள்ளதாக சட்ட அமைச்சகம் தெரிவித்துள்ளது.

லோக் அதாலத் மூலம் 23 அரை கோடிக்கும் அதிகமான வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சகம் மேலும் கூறியுள்ளது.

இலவச சட்ட உதவிகள் மற்றும் உரிமைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

❖❖❖❖❖❖❖❖

ஷிவ்ராஜ் சிங்

மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் ஒடிஷா மாநிலம் புபனேஸ்வரில் நடைபெறும் சிறுதானிய தின நிகழ்ச்சிகளில் நாளை பங்கேற்கிறார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் சிறுதானிய உற்பத்தியை மேம்படுத்துதல், பதப்படுத்துதல் உள்ளிட்டவை குறித்து விவசாயிகளிடையே கலந்துரையாடுகிறார்.

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பது, கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் தினை விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்து அவர் எடுத்துரைக்கவுள்ளார்.

கட்டக்கின் சதார் பகுதியில் விவசாயிகளை சந்தித்து உரையாடும் வேளாண் அமைச்சர், மத்திய அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெறும் ஆலோசனை கூட்டத்திலும் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

ஓம்பிர்லா

மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தின் 22-ம் ஆண்டு இந்திய - பிராந்திய 3-வது மண்டல மாநாட்டை நாகாலாந்து கோஹிமாவில் நாளை தொடங்கி வைக்கிறார்.

மாற்றத்தின் வினையூக்கிகளாக சட்டமன்றங்கள் என்ற கருப்பொருளுடன் நடைபெறும் இந்த 2 நாள் இம்மாநாட்டில் வடகிழக்கு பிராந்தியத்தின் 8 மாநிலங்களின் தலைமை அதிகாரிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

விமான கண்காட்சி

இந்திய விமானப்படையின் 93-வது ஆண்டு கொண்டாட்டங்களை ஒட்டி குஹாட்டியில் விமான கண்காட்சி இன்று நடைபெறுகிறது.

இதில் விமானப்படையின் ரஃபேல், சுகோய்-30, அப்பாச்சி, சூரியகிரண் உள்ளிட்ட போர் விமானங்களின் சாகச நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

விமானப்படையின் 75 விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் மூலம் 25-க்கும் மேற்பட்ட கண்கவர் காட்சிகள் நிகழ்த்தப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖❖

விமான சேவை

இந்தியா – சீனா இடையேயான பயணியர் விமான போக்குவரத்து சேவை இன்றுமுதல் மீண்டும் தொடங்கப்படவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

பீஹார்

பீஹார் மாநில சட்டப்பேரவைக்கு நாளைமறுநாள் நடைபெறும் 2-ம் கட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் முடிவடைகிறது.

பஹல்பூர், கயா, கிஷன்கஞ்ச், உள்ளிட்ட 20 மாவட்டங்களின் 122 சட்டப் பேரவை தொகுதிகளில் நடைபெறும் தேர்தலுக்கான பிரச்சாரத்தில் அரசியல் கட்சி தலைவர்கள் உச்சக்கட்ட பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர்.

தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மத்திய அமைச்சர்கள் திரு.அமித்ஷா, திரு. ராஜ்நாத் சிங் ஆகியோர் சாராம், ஆர்வல், அவ்ரங்காபாத், கைமூர் பகுதிகளில் வாக்கு சேகரிக்கிறனர்.

காங்கிரஸ் கட்சியின் திரு.ராகுல்காந்தி, பூர்ணியா, கிஷன்கஞ்ச் பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இத்தேர்தலில் 136 பெண்கள் உட்பட ஆயிரத்து 302 வேட்பாளர்களின் அரசியல் எதிர்காலத்தை 3 கோடியே 70 லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் நிர்ணயிக்க உள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் திருச்சியில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூத்த குடிமக்களின் பகல் நேர பராமரிப்பிற்காக அன்பு சோலை திட்டத்தை நாளை பிற்பகல் தொடங்கி வைக்கிறார்.

முன்னதாக புதுக்கோட்டை மாவட்டம் களமாவூரில் 767 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி,

முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

முதலமைச்சரின் வருகையை ஒட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் இன்றும் நாளையும் ட்ரோன்கள் பறக்க தடை விதித்து ஆட்சித்தலைவர் திருமதி. அருணா உத்தரவிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

எ.வ.வேலு

பட்டப்படிப்பு முடித்த மாணாக்கர் பணி சூழல் மேம்பாட்டை மட்டுமே கருத்தில் கொள்ளாமல், தமிழ் வளர்ச்சிப் பணிகளிலும் பங்காற்ற வேண்டுமென்று மாநில பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு கேட்டுக் கொண்டுள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷி வந்தியம் அரசு கலை அறிவியல் கல்லூரியில் 196 மாணாக்கருக்கு உயர்கல்வி துறை அமைச்சர் திரு.கோவி. செழியனுடன் இணைந்து பட்டங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஆட்சித்தலைவர் திரு. பிரசாந்த் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖

சீருடை பணியாளர் தேர்வு

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் நடத்தும் இரண்டாம் நிலை காவலர், சிறைக்காவலர் மற்றும் தீயணைப்பாளர் பணியிடங்களுக்கான எழுத்து தேர்வு இன்று நடைபெற்றது.

3 ஆயிரத்து 655 காலிப்பணியிடங்களுக்கான இத்தேர்வை மாநிலம் முழுவதும் 45 மையங்களில் இரண்டு லட்சத்திற்கும் அதிகமானோா எழுதினர்.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கான தனித்துவ அடையாள எண் வழங்கும் சிறப்பு முகாம் அனைத்து வருவாய் கிராமங்களிலும் வரும் 15-ம் தேதி வரை நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் இன்று நடைபெற்ற மாரத்தான் போட்டியை ஆட்சித்தலைவர் திரு.சுகபுத்ரா கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம் சார்பில் பிரதம மந்திரி தேசிய தொழில் பழகுநர் மேளா ஒரகடம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நாளை நடைபெறவுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

தேனி

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்த விழிப்புணர்வு காய்கனி சிற்ப கண்காட்சி தேனி உழவர் சந்தையில் இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

தர்மபுரி

சர்தார் வல்லபப்பாய் பட்டேலின் 150-வது பிறந்த நாளை ஒட்டி தர்மபுரியில் நடைபெற்ற தேசிய ஒற்றுமை ஓட்டத்தை தொடர்ந்து இளையோர் மேம்பாட்டிற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மை பாரத் யுவகேந்திராவின் துணை இயக்குநர் திரு. பிரவீன் ஜான்ஸ்டன் தெரிவித்தார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

வில்வித்தை

டாக்காவில் நடைபெறும் ஆசிய வில்வித்தை சாம்பியன்பட்ட போட்டியில் ஜோதி சுரேக்கா வெண்ணம், அபிஷேக் வர்மா, பிரதமேஷ், ஜவ்கர், தீபிகா குமாரி உள்ளிட்ட16 பேர் கொண்ட இந்திய அணி பங்கேற்கவுள்ளது.

இப்போட்டிகள் இன்று தொடங்கி வரும் 14-ம் தேதிவரை நடைபெறவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.